1968 மார்ச் 4]

திரு. கே. விநாயகம் : சார், இந்தக் கொசுத் தொல்லை சென்னையிலே கடந்த இருபது ஆண்டுகளாக இவ்வளவு அதிகமாக இல்லை. இப்பொழுதுதான், ஒரு ஆண்டாகத்தான் அதிகமாக இருக்கிறதாக ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்கள். இதற்கு ஏதாவது பிரத்தியேகக் காரணம் உண்டா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இருபது ஆண்டுகளாகச் சேர்ந்திருந்து இப்பொழுது ஒரேயடியாக தொல்லை கொடுக்கின்றன.

Dr. H. V. HANDE : The same question was asked two or three years ago. The then Minister replied that he was not in charge of mosquitoes. The fact remains that mosquitoes are a nuisance and the number of injections they give in day time and night time is something unthinkable. The Government have got a programme to widen the Buckingham Canal. Will the Minister for Health or the Minister for Public Works tell us whether the scheme has been taken up in right earnest and whether any beginning has been made ? Is the Minister aware that wherever there are cemented portions and non-marchy areas, the mosquito menace is not very serious ? Will the Government take all these factors into consideration and tell us what concrete steps they have taken ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த வகைகளில் கொசுத் தொல்லைகளை ஒழிக்கலாம் என்பதைப் பற்றி விரிவாகப் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், மலையில் இருக்கக்கூடிய கொசுக்களுக்கும், நாட்டுப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கொசுக்களுக்கும் வித்தியாசம் உண்டா ? மலைக்கொசு கடித்தால் மலேரியா நோய் வரும் என்று சொல்கிறார்கள். நாட்டுக் கொசுக்கள் கடித்தால் என்ன நோய் வரும் ? கும்பகோணம் கொசுவிற்கும் சென்னைக் கொசுவிற்கும் என் வித்தியாசம் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மலையிலிருக்கிற கொசுக்களுக்கும், நகரத்திலிருக்கும் கொசுக்களுக்கும் என்ன வித்தியாசம் என்று தெரியாது. மலையிலிருக்கும் கொசுக்கள் மலையிலிருப்பவர்களைக் கடிக்கின்றன. நகரத்தில் உள்ள கொசுக்கள் நகரத்திலுள்ளவர்களைக் கடிக்கின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, சென்ற 20 ஆண்டு காலமாக கொசுக்கள் பொதுமக்கள் இரத்தத்தைக் குடித்துக் கொண்டிருந்தன. இந்த வருஷம் மட்டும் அவைகள் பெரிய அளவில் இறந்துவிட்டன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

Rent Control Act

*138 *Q.*—**Thiru K. M. RAMASWAMI GOUNDER :** Will the Hon. the Minister of Public Health be pleased to state whether there is any proposal to implement the provisions of the Rent Control Act more effectively in view of the acute shortage of housing in Madras City and undue rise in the rental value of houses ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு 1960-ம் ஆண்டுக் கட்டிடங்கள் (குத்தகை-வாடகை) கட்டுப்பாடு சட்டத்தின் விதித்துறைகளை அனைத்தும் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்திற்காகவும் அரசாங்க பணியாளர்களுக்காகவும் மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் வீடுகள் அரசாங்கத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. காலியாகும் வீடுகள் பற்றித் தகவல் தெரிவிக்காதவர்களை வீட்டு வசதிக்கட்டுப்பாட்டுப் பணியாளர்கள் அவ்வப்போது சென்று விசாரணை செய்வதன் மூலம் மேற்படி சட்டத்தின் விதித் துறைகள் திறம்படச் செயல்படுத்தப்படுகின்றன. குடியிருப்பவர்களை நியாயமன்றி வெளியேற்றுவதனின்றும் பாதுகாப்பு அளிக்கவும் அதிக வீட்டு வாடகை காரணமாகத் துன்புறுவோர் மனுச் செய்து கொள்வதின்மேல், நீதி மன்றங்கள் நியாய வாடகை வரையறுக்கவும் மேற்படி சட்டத்தில் ஏற்கனவே விதித்துறைகள் உள்ளன.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : தலைவரவர்களே, உண்ண உணவு, உடுக்க உடை, அடுத்து அத்தியாவசியத் தேவை இருக்க வீடு. ஆனால் இது தீராத பிரச்சினையாக இருப்பதால் அதிசய மனிதர் கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் திட்டப்படி விரைவில் வீடுகள் கட்ட அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ? அதை உடனடியாக அமல் நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது வீட்டு வசதி போர்டு பற்றிய கேள்வி. ஆனால் இப்பொழுதுள்ள கேள்வி வாடகைக் சட்டுப்பாட்டுச் சட்டம் எந்த அளவுக்கு அமல் படுத்தப் படுகிறது என்பது பற்றிய கேள்வி.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் சட்ட மன்ற உறுப்னர்களுக்குத் தற்போது வீடுகள் வழங்கப்படுவதில்லை. அதை மாற்றி சட்டமன்ற அங்கத்தி னர்களுக்கு வழங்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சட்டமன்ற உறுப்பினர் கள் அவரவர்கள் தொகுதிகளிலேயிருந்து பணிபுரிய வேண்டியிருக்கி றது. சென்னையிலிருக்கின்றவர்களைப் பொறுத்த வரையில் அவர் களுக்கு வீடுகள் இருந்து வருகின்றன. எனவே, கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

Thiru K. VINAYAKAM : When the House Rent Control Act came into force, it was envisaged just to get over the difficulty of paucity of houses available in the City of Madras and then it was decided that the Act should be reviewed periodically, at least once in three years. Have the Government taken note of the various judgements of the High Court relating to this Act and will they think of recasting the entire Act so as to avoid the difficulties arising out of the functioning of this Act ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் வழக்குரைஞர். இந்தச் சட்டம், இப்பொழுது இருக்கிறது 1960-ம் ஆண்டுச் சட்டம். அதற்கு முன்னால் பல ஆண்டுகளாக இருந்தது. அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது 1960-ம் ஆண்டுச் சட்டம். இதிலே ஏதாவது கஷ்டம் இருந்தால் அரசாங்கத் தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பரிசீலிக்க அரசாங்கம் தயாராயிருக்கும்.

புலவர் க. முருகையன் : தலைவரவர்களே, சென்னையிலே வேலை யில்லாத பலருக்கு, முன்பு வேலையிலிருந்துபோது கொடுத்த வீடுகள் அப்படியே இருக்கின்றனவே, அவற்றை மாற்றுகிற உத்தேசம் உண்டா ? பல்வேறு வீடுகள் சென்னையிலிருந்தும் அதைத்

தனிப்பட்டவர்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டு சர்க்காரால் கொடுக்கப்பட்ட வீட்டிலே தொடர்ந்து இருந்து வருகிறார்கள். அது பற்றி நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலை இழந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள் உடனடியாக வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்பது சட்டம். அப்படிச் செய்யாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் அதுபோன்றவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஹவுஸ் ரெண்ட் ஆக்டை பஞ்சாயத்து பகுதிகளுக்கு விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டவுன் பஞ்சாயத்துக்களில் அப்ளை ஆகும்படியான ஒரு நோட்டிபிகேஷன் போடப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் டவுன் பஞ்சாயத்துக்கள் அதில் அடங்கியிருக்கும். ஏதாவது விட்டுப்போயிருந்தால் அரசாங்கத்திற்கு எழுதியனுப்பினால் அதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பல பேர்கள் தாங்களே குடியிருக்க வேண்டுமென்று கூறி வீட்டை காலி செய்யும்படி கேட்டாலும் காலி செய்து கொடுக்கக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் இல்லாத காரணத்தினால் பல பேர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஒருவேளை அவர்கள் வேறு ஒருவருக்கு வாடகைக்கு விடுவதற்காக வேண்டி அப்படி தந்திரம் செய்வதாகச் சொல்லுகிறார்கள். அப்படி தங்களுக்கென்று கேட்டு வேறு ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சட்டத்திலே இருப்பதை கவனித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சொந்த உபயோகத்திற்கு வீடு வேண்டுமென்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுகின்றன. அவர்கள் கோரிக்கை நியாயமானதாகப்பட்டால் (bona fide) நிச்சயமாக அது கவனிக்கப்படுகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த சொந்த உபயோகத்திற்கு என்று கேட்டு, வேறு ஒருவருக்கு வாடகைக்கு விடுபவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சட்டத்திலே இடம் இருக்கிறது. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Thiru K. VINAYAKAM : Sir, in the actual working of this Act, the house-owners have experienced immense troubles from the recalcitrant tenants. Also, in view of the increase in the construction of new houses both by private persons other agencies and the Housing Board, will the Government think of abrogating the entire Act ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வீடுகளுடைய வாடகையை குறைவாகப் பெறுவதற்கும் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகவும்தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டம் இருக்கிற காரணத்தினாலே ஒரு சிலர் கஷ்டத்திலே இருப்பார்கள். அதை கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். வாடகையை உயர்த்துவதை தடுப்பது தான் இந்த சட்டத்தினுடைய நோக்கம். பொது மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதை தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன் வராது.